

அன்றுதான் முகூர்த்த தினம்.

ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் ஆஸ்தான மண்டபத்தில் கூடிவிட்டார்கள். ராஜமரியாதைகளும் முறைப்படி நடந்தேறின.

இளவரசன் விஜயேந்திரன் மணமேடையில் வந்தமர்ந்தான்.

மணமகளும் தோழியர் புடைசூழ வந்து மணமகன் அருகில் உட்கார்ந்தாள்.

மந்திரங்கள் ஒலித்தன.

முகூர்த்த வேளை நெருங்கியது.

பட்டத்து இளவரசன் விஜயேந்திரன், புரோகிதர் பணிவுடன் நீட்டிய மங்கலத் தாலியைக் கையில்



இன்னமும் ஆகவில்லையே! இந்நிலையிலே உன்னை என்னுடன் எங்ஙனம் நான் அழைத்துச்செல்ல முடியும்? போர்முடிந்து, வெற்றியுடன் வாகைசூடித் திரும்பி னதும், உன்னை என் இதய ராணியாக்கிக் கொள் கிறேன்!" என்று மறுமொழி உதிர்த்தான் இளவரசன்.

இதைக்கேட்ட சடுதியில் ராஜவல்லி தன் கைப் பிடிப்பிலிருந்த அந்தத் தாலியை எடுத்து விஜயேந்திர னிடம் நீட்டி, "இந்தாருங்கள் அத்தான்!... உங்கள் கரங்களால் எனக்குத் தாலி கட்டுங்கள் முதலில்!" என்று மீண்டும் கெஞ்சினாள்.

அதேகணத்தில், போர்முரசம், அபாய அறிவிப்பின் உச்சக்கட்டத்தின் நிலையை அறிவிக்கும் வகையில் முழங்கிற்று.



நிலவுத்தீவு மன்னனின் கை ஓய்ந்து விட்டதா?

ஏன் அவன் அப்படி வைத்த கண் வாங்காமல் விஜயேந்திரனையே வெறிக்க வெறிக்கப் பார்க்க வேண்டும்?

மங்களபுரி இளவரசன் வெகு லாகவமாக மடக்கி விட்டான் நிலவுத்தீவு மன்னனை!

நிலவுத்தீவு மன்னனின் கைவாள் நொறுங்கி, இள வரசனின் பாதங்களைச் சரணடைந்தது.

வெற்றி, வீரமகன் விஜயேந்திரனுக்கே!

**உண்மைதான்:**



“உன் பெயர் என்ன?” என்று கேள்வி விடுத்தான் இளவரசன்.

“வாசவன்!”

“இந்திரனுக்குரிய பெயரல்லவா இது? பேஷ், பேஷ்!” என்று பாராட்டினான். மின்னலாக ஒரு நினைவு ஊடுருவியது. ஊஹூம், எனக்கு ஆபத்துக்கு உதவிய அந்த இளைஞன் அல்ல இவன்! ...

அடுத்த கணத்தில், அவ்விளைஞன் தனது அழகிய கண்களால் சிரித்தபடி, கையிலிருந்த கோப்பையை இளவரசனிடம் கொடுத்தான். திராட்சைரசம் அதில் இருந்தது. வாசனை அற்புதமாக இருந்தது.



கலைதாசனை விஜயேந்திரன் மதுவால் மயங்கிய வனைப் போன்று நாகப்பாம்பாகக் கட்டுண்டு கிடந் தான்.

இதைக் கண்டு உள்ளம் கொதித்தாள் ராஜவல்லி; உயிர் துடித்தாள்!

ராஜவல்லி தன் குலதெய்வத்தை மனத்தில் பதித்து வழிபட்டு, அவ்விடமிருந்து புறப்பட நகர்ந் தாள்.

அதுசமயம்:

"துரோகி!" என்றொரு சிம்மக்குரல் கேட்டது.

அம் மூவருமே திரும்ப வேண்டியவர்கள் ஆயினர்.